**மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்**

**சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் – 5.12.2014**

**வடகிழக்குப் பருவமழையினால் சாலைகளில் எற்பட்ட சேதங்கள் மற்றும் சீரமைப்புகள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!**

பத்துக்கோடி உலகத் தமிழினமும்
கரம் கூப்பி வணங்குகின்ற
புண்ணிய வேதமே!

அன்னை தமிழ்நாடு
தவமிருந்து பெற்றெடுத்த தலைமகளே!
முத்தமிழின் முதற்சொல்லே!

12,524 கிராம ஊராட்சிகளுக்கு
தன்னிறைவு தரும்
“ தாய் திட்டம்” தந்து
இந்திய பேரரசுக்கு வழிகாட்டும் அன்னையே!

12 மாநகராட்சிகளையும்
124 நகராட்சிகளையும்
528 பேரூராட்சிகளையும்
ஆக மொத்தமாய்
664 நகர்புற உள்ளாட்சி
அமைப்புகளை கொண்ட

நாட்டின் தலையாய மாநிலமாம்

தமிழகத்தை

நகர்மயம் ஆதலில்

முதல் மாநிலம் – என்னும்

புரட்சிக்கு வித்திட்ட தாயே!

தமிழினத்துப் பெருமைகளை

கண்ணிமையாய் காக்கின்ற

எங்கள் குலச் சாமி!

தமிழக மக்களை

என்றும் ஆட்சி செய்யும்

**மக்களின் முதல்வர்**

**இதயதெய்வம், புரட்சித் தலைவி**

**மாண்புமிகு அம்மா அவர்களின்**

திருவடிகளை வணங்கி

**மாண்புமிகு அம்மா** அவர்கள்

வீற்றிருக்கும் திசைநோக்கி தலைவணங்கி

இந்த சிறப்பு கவன ஈர்ப்பு

தீர்மானத்தின் மீதான விளக்கத்தை

இப்பேரவைக்கு வழங்க விளைகிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே**

சென்னை மாநகரில் உள்ள **387.38** கி.மீ. நீளமுள்ள **471** பேருந்து தட சாலைகள், சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் **75** பேருந்து தட சாலைகள் நெடுஞ்சாலைத் துறையின் மூலம் பராமரிப்பில் உள்ளது.

வடகிழக்குப் பருவ மழையின் காரணமாக, **155** சாலைகளில் **552** இடங்களில் **1,63,387** சதுர மீட்டர் பரப்பளவில் சேதம் ஏற்பட்டன.

**மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி, மழையால் சேதமடைந்த சாலைகளை சீரமைக்க, **16.37** கோடி ரூபாய் மதிப்பிட்டில், போர்க்கால அடிப்படையில் சீரமைக்கப்படுகிறது.

**2010 – 2011** ஆம் ஆண்டு மைனாரிட்டி திமுக ஆட்சியில் புதுப்பிக்கப்பட்ட சாலைகளின் எண்ணிக்கை **133** ஆகும். ஒப்பந்ததாரரின் பராமரிப்பு காலம் **ஓராண்டாக இருந்த காரணத்தால்** கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சியினரால் போடப்பட்ட சாலைகள் தான் தற்போது சேதம் அடைந்துள்ளன என்பதை இப்பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சேதமடைந்த சாலைகள் சென்னை மாநகராட்சியால் ஒட்டுப் பணி மூலம் சீரமைக்கப்பட்டு வருகிறது.

**மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி, சாலைகளை அமைக்கும் ஒப்பந்ததாரார்களின் பராமரிப்பு காலம் **3** ஆண்டுகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மேலும் சென்னை மாநகராட்சியில் நடைபெறும் அனைத்து சாலைப்பணிகளும் தரக்கட்டுப்பாடு சோதனை செய்யப்பட்ட பின்னரே ஒப்பந்ததாரருக்கு பணப்பட்டுவாடா செய்யப்படுகின்றது. இதன் காரணமாக, தற்போது அமைக்கப்படும் சாலைகளின் தரம் உறுதி செய்யப்படுவதால் சாலைகளின் சேதாராம் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. இச்சாலைகளில் 77 பகுதிகளில் ஏற்பட்ட சேதங்கள் ஒப்பந்ததாரர்களின் பராமரிப்பு காலத்தில் உள்ளதால், அந்தந்த ஒப்பந்ததாரர்களைக் கொண்டே, மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, போர்க்கால அடிப்படையில் சீரமைக்கப்பட்டு வருகிறது என்பதை இப்பேரவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இது தவிர, சென்னை மாநகரில் உள்ள **32,882** உட்புற சாலைகளில், பருவ மழையின் காரணமாக **747** சாலைகளில் **2,582** இடங்களில் சேதம் ஏற்பட்டது. இவற்றில் ஒப்பந்ததாரர்களின் பராமரிப்பு காலத்தில் உள்ள **31** சாலைகள் அவர்களைக் கொண்டே

சீரமைக்கும்பணி, மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீதமுள்ள 716 சாலைகள் சென்னை மாநகராட்சி மூலம் 3.54 கோடி ரூபாய் செலவில் சீரமைக்கப்பட்டு வருகிறது.

**சென்னை மாநகராட்சியில் உள்ள சாலைகளில் 2 சதவீத சாலைகள் மட்டுமே பருவமழையால் சேதமடைந்தன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.**

மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின், பல்வேறு நிதி ஆதாரங்களின் மூலம், 119 ஜெட்ராடிங் இயந்திரங்கள், 190 துார் வாரும் இயந்திரங்கள், 28 ஜெட்ராடிங் மற்றும் உறிஞ்சும் இயந்திரங்கள் மற்றும் 43 அதிவேக கழிவு நீர் உரிஞ்சும் இயந்திரங்கள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளதால், கழிவுநீர் அமைப்புகளை சுத்தம் செய்யும் பணிகள் தொய்வின்றி தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. இதனால் கழிவுநீர், சாலைகளின் மேற்பரப்பில் தேங்கும் நிலை தவிர்க்கப்பட்டு, சாலைகள் சேதமடைவது முற்றிலுமாக தவிர்க்கப்பட்டுள்ளது.

மேலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, இவ்வாண்டில் **1,194** கி.மீ நீளமுடைய மழைநீர் வடிகால்கள் **7.20** கோடி ரூபாய் செலவில் தூர் வாரப்பட்டுள்ளன.

மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, **100**க்கும் மேற்பட்ட பம்புசெட்டுகள் மற்றும் சூப்பர் சக்கர் வாகனங்கள் மூலம் தேங்கியிருந்த மழைநீர் உடனுக்குடன் அகற்றப்பட்டது.

கடந்த மைனாரிட்டி திமுகவின் ஐந்து ஆண்டு கால ஆட்சிக் காலத்தில், சென்னை மாநகராட்சியில் **8,354** உட்புற சாலைகள் **429** கோடி ரூபாயில் அமைக்கப்பட்டன.

மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியின், மூன்றரை ஆண்டு காலத்தில், சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழ் (CMCDM), **4,676** சாலைகள் **1,086** கோடி ரூபாயில் திட்டமிடப்பட்டு, **3,705** சாலைகள் **811.98** கோடி ரூபாயில் முடிக்கப்பட்டுள்ளன என்பதை பெருமையுடன் இந்த பேரவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் மாண்புமிகு அம்மா அவர்களின் மூன்றரை ஆண்டு கால ஆட்சியில், மூலதன நிதியில் 12,985 சாலைகள் 1,488 கோடி ரூபாயில் புதுப்பிக்க திட்டமிடப்பட்டு 9,943 சாலைகள் 901.04 கோடி ரூபாயில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள சாலைகள் 2 மாதங்களில் புதுப்பிக்கப்பட உள்ளன.

**மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி,** சென்னை மாநகரில் புதுப்பிக்கப்பட வேண்டிய பேருந்து தட சாலைகள் மற்றும் அனைத்து தார்சாலைகளும், போர்கால அடிப்படையில் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

## கூடுதல் விவரங்கள்

சென்னை நீங்கலாக உள்ள 11 மாநகராட்சிகள் மற்றும் 124 நகராட்சிகளில் பராமரிக்கப்படும் **23,350 கி.மீ**, நீளமுள்ள சாலைகளில் சமீபத்தில் பெய்த பருவமழையினால் மாநகராட்சிகளில் 257.57 கி.மீ. சாலைகளும், நகராட்சிகளில் 214.64 கி.மீ. சாலைகளும் சேதமடைந்தன. அவற்றில் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, 20.162 கி.மீ. சாலைகளின் சீரமைப்புப் பணிகளுக்கு, 4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

மீதமுள்ள சாலைகளில் மிகவும் மோசமாக பழுதடைந்த சாலைகள் அந்தந்த உள்ளாட்சிகளின் பொது நிதியிலிருந்து சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த மைனாரிட்டி திமுகவின் 5 ஆண்டு கால ஆட்சியில், பேரூராட்சிப் பகுதிகளில் போடப்பட்ட சாலைகளில், பழுதடைந்த 40 சாலைகளை சீரமைக்க, மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களால், 33.87 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், பேரூராட்சிப் பகுதிகளில் போடப்பட்ட சாலைகள் எதுவும் சேதமடையவில்லை.

வடகிழக்கு பருவமழை காரணமாக, திண்டுக்கல், திருநெல்வேலி, கன்னியாகுமரி, ஈரோடு மாவட்டங்கள் உட்பட தமிழகத்தில் அனைத்து பகுதிகளிலும் உள்ள ஊரக சாலைகளில் **6295** கி.மீ நீளமுள்ள சாலைகள் சேதமடைந்தன.

**மாண்புமிகு மக்கள் முதல்வர் அம்மா அவர்களின்** வழிகாட்டுதலின்படி, சேதமடைந்த சாலைகள் தற்காலிக மேம்பாடு செய்ய 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, போர்க்கால அடிப்படையில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் ஊரக உள்ளாட்சி நிதி ஆதாரங்களிலிருந்தும் உடனடி சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள தக்க அறிவுரை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

வடக்கிழக்கு பருவமழையால் அதிக அளவில் பழுதடைந்த சாலைகளை நிரந்தரமாக மேம்பாடு செய்ய மதிப்பீடு தயார் செய்து உரிய கருத்துரு அனுப்ப மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

.....